AXIS BANK

# வெல்கம் பலன்: ரூ. 500 மதிப்புள்ள அமேசான் வவுச்சர்

1. இந்தச் சலுகைக்கு தகுதி பெறுவதற்கு, கார்டு வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் வாடிக்கையாளர் ஒரு பரிவர்த்தனையை மேற்கொள்ள வேண்டும்.
2. தங்களுடைய ஏர்டெல் ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டில் இணைதல் கட்டணமாக ரூ.500 + வரிகள். வசூலிக்கப்படும் கார்டுகளுக்கு மட்டுமே வெல்கம் வவுச்சர் பொருந்தும்.
3. ரத்து செய்யப்பட்ட, ரிட்டர்ன் செய்யப்பட்ட அல்லது ரொக்கப் பரிவர்த்தனைகள் இந்தப் பலனைப் பெறுவதற்கு செல்லத்தக்க பரிவர்த்தனையாகக் கருதப்பட மாட்டாது.
4. ஏர்டெல் ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் முதல் பரிவர்த்தனையை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்த 30 தினங்களுக்குள் அமேசான் கிஃப்ட் வவுச்சர்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு அனுப்பி வைக்கப்படும்.
5. வவுச்சரைப் பயன்படுத்துவதற்கு -

   படிநிலை 1: www.amazon.in/addgiftcard க்கு செல்லவும்

   படிநிலை 2: அதற்குரிய களத்தில் உங்கள் கிஃப்ட் கார்டு குறியீடை உள்ளிடவும்

   படிநிலை 3: "உங்கள் இருப்பில் சேர்க்கவும்" என்பதைக் கிளிக் செய்யவும்

   மேலே கூறப்பட்ட 3 படிநிலைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவுடன், கிஃப்ட் கார்டு தொகையானது கணக்கில் சேர்க்கடுப்படும்
6. அமேசான் கணக்கு இல்லாத வாடிக்கையாளர்கள் ரெடீம் செய்வதற்கு, ஒரு புதிய அமேசான் கணக்கை உருவாக்கி, இந்த வவுச்சரைத் தங்கள் அமேசான் பே கிஃப்ட் கார்டில் சேர்க்க வேண்டும்.

அமேசான் வவுச்சர்களுக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

- இந்த கிஃப்ட் வவுச்சர்களை www.amazon.in அல்லது அமேசான் மொபைல் ஆப் -இல் பட்டியலிடப்பட்டுள்ள விற்பனையாளர்களின் தயாரிப்புகளுக்கு மட்டுமே ஆன்லைனில் ரெடீம் செய்ய முடியும்.
- வவுச்சர்களை அமேசான் பே கிஃப்ட் கார்டில் சேர்த்து, இருப்புக்காக ரெடீம் செய்ய வேண்டும்
- மற்றொரு அமேசான் பே கிஃப்ட் கார்டை வாங்குவதற்கு இந்த வவுச்சர்களைப் பயன்படுத்த இயலாது.
- அமேசான் பே கிஃப்ட் கார்டின் தொகையை விட ஆர்டரின் மதிப்பு அதிகமாக இருக்கும் பட்சத்தில், மீதித் தொகையை கிரெடிட் கார்டு/டெபிட் கார்டு/இன்டர்நெட் பேங்கிங் மூலம் செலுத்த வேண்டும். மீதித் தொகையை செலுத்துவதற்கு கேஷ் ஆன் டெலிவரி பேமெண்ட் விருப்பத்தைப் பயன்படுத்த இயலாது.
- அமேசான் பே கிஃப்ட் கார்டின் தொகையை விட ஆர்டர் மதிப்பு குறைவாக இருக்கிறது என்றால், எஞ்சியுள்ள இருப்புத் தொகையானது (ஆர்டர் மதிப்பைக் கழித்த பிறகு) வாலட் இருப்பில் பிரதிபலிக்கும், அதை அடுத்தடுத்த பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- கிஃப்ட் கார்டை ரெடீம் செய்த நாளிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு அமேசான் பே கிஃப்ட் கார்டு காலாவதியாகிவிடும், அதற்குப் பிறகு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலுவைத் தொகை திரும்பப் பெறப்படும்.
- அமேசான் பே கிஃப்ட் கார்டை பணத்திற்காகவோ, கிரெடிட்டுக்காகவோ ரெடீம் செய்ய முடியாது.

- அமேசான் பே கிஃப்ட் கார்டுகளின் பாதுகாப்பு மற்றும் பத்திரத்திற்கான பொறுப்பு உங்களுக்கு மட்டுமே உண்டு. கிஃப்ட் கார்டு தொலைந்து விட்டாலோ, திருடப்பட்டாலோ அல்லது அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டாலோ, எந்த விதமான தவறு நடந்தாலோ அல்லது கமிஷன் செய்தாலோ, அதற்கு ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பாகாது.
- அமேசான் பே கிஃப்ட் கார்டு உங்களுக்கு அனுப்பப்பட்டவுடன், கிஃப்ட் கார்டு பின் அல்லது கிஃப்ட் கார்டு எண்ணை இரகசியமாக நீங்கள் பாதுகாக்க வேண்டும். வாங்குபவரின் தவறு காரணமாக இந்த ரகசிய விவரங்களை நீங்கள் தவற விட்டு, அதன் காரணமாக கிஃப்ட் கார்டு ஏதேனும் வகையில் தவறாகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில், அதற்கு ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பாகாது, அதற்காக எந்த ரீஃபண்டும் வழங்க இயலாது.
- அமேசான் பே கிஃப்ட் கார்டுகளைப் பயன்படுத்தி வாங்கப்பட்ட தயாரிப்புகளுக்கு, ஆக்ஸிஸ் வங்கி எந்தப் பொறுப்பையும் ஏற்காது, மேலும் அவை தொடர்பான எந்தப் பொறுப்பும் வெளிப்படையாக மறுக்கப்படுகிறது.
- அமேசான் பே கிஃப்ட் கார்டுகளின் செல்லுபடியாகும் காலத்தை நீட்டிக்க இயலாது; காலாவதியான/பயன்படுத்தாத கிஃப்ட் அமேசான் பே கிஃப்ட் கார்டுகளுக்குப் பதிலாகப் புதிய கிஃப்ட் கார்டுகளை வழங்க இயலாது.
- அமேசான் பே கிஃப்ட்கார்டுகளை ரீலோடு செய்யவோ அல்லது மறு-விற்பனை செய்யவோ முடியாது.
- அமேசான் பே கிஃப்ட்கார்டு பயன்படுத்தப்படுகின்ற/ரெடீம் செய்யப்படுகின்ற தள்ளுபடி/பலன் அல்லது தயாரிப்புகள்/சேவைகளின் பயன்படும் தன்மை, மதிப்பு, தரம், நிறுவனம் மற்றும்/அல்லது தன்மைக்கு ஆக்ஸிஸ் வங்கி எந்தவித உத்தரவாதமும் மற்றும் எந்தவித பிரதிநிதித்துவமும் அளிக்காது.
- அமேசான் குறியீட்டைக் கோருவது தொடர்பான அனைத்துத் தகவல்தொடர்புகளும் அமேசான் ஜிசி ஹெல்ப் டெஸ்கிற்கு அனுப்பப்பட வேண்டும்: • வேலை நாட்களில் காலை 10:00 முதல் மாலை 7:00 மணி வரை • மின்னஞ்சல் ஐடி: corp-gc@amazon.in • இலவச தொலைபேசி எண்: 1800 3000 2049
- ஏதேனும் கார்டுதாரர் இந்தச் சலுகையின் கீழ் கிடைக்கின்ற பலன்களைப் பெறுவதற்காகவோ அல்லது வேறு வகையிலோ ஆக்ஸிஸ் வங்கி சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகவோ ஏதேனும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது கண்டறியப்பட்டால், சலுகையின் பலன்களைப் பெறுவதில் இருந்து அந்தக் கார்டுதாரரை தகுதி நீக்கம் செய்யும் உரிமையை ஆக்ஸிஸ் வங்கி கொண்டுள்ளது.
- அமேசான் பே கிஃப்ட் வவுச்சர் பயன்படுத்தப்படுகின்ற/ரெடீம் செய்யப்படுகின்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகளை டெலிவரி செய்வதில் ஏற்படும் தாமதம் அல்லது இழப்புக்கு ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காது.
- அமேசான் பே கிஃப்ட் காரடைப் பயன்படுத்துவதில் ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், அது ஆக்ஸிஸ் வங்கிக்கு எதிராக எந்தவிதக் கிளைமையும் உருவாக்காது, அது நேரடியாக அமேசான் மூலம் தீர்க்கப்படும். ஆக்ஸிஸ் வங்கியின் ஏதேனும் நடவடிக்கைகள் மற்றும் கவனக் குறைவின் காரணமாக அல்லது ஆக்ஸிஸ் வங்கி கார்டு தொடர்பான கிளைம்கள் அல்லது மோசடி காரணமாக ஏதேனும் வாடிக்கையாளர் கிளைம்கள் எழுகின்ற பட்சத்தில், அவை ஆக்ஸிஸ் வங்கியால் தீர்க்கப்படும்.
- வாடிக்கையாளர் இந்தச் சலுகையின் கீழ் பெறுகின்ற பலன்களைப் பயன்படுத்துவதால் அல்லது வேறுவிதமாக ஏற்படக் கூடிய இழப்பு/சேதம்/ கிளைம் ஆகியவற்றுக்கு ஆக்ஸிஸ் வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

- தடைசெய்யப்பட்ட இடங்களில் மற்றும்/அல்லது ஏதேனும் காரணத்திற்காக இது போன்ற சலுகைகளை வழங்க முடியாத தயாரிப்புகள்/சேவைகளுக்கு இந்தச் சலுகை கிடைக்காது.
- இந்தச் சலுகைக்குப் பொருந்தக்கூடிய அனைத்து அல்லது ஏதேனும் விதிமுறைகளை எந்தக் காரணமும் கூறாமல் அல்லது எந்தவித முன்னறிவிப்பும் அளிக்காமல், திருத்துவதற்கான/மாற்றி அமைப்பதற்கான உரிமை ஆக்ஸிஸ் வங்கிக்கு உண்டு. சலுகை காலத்துக்குப் பின்னர் எந்தவிதக் காரணமும் தெரிவிக்காமல் அல்லது எந்தவித முன்னறிவிப்பும் அளிக்காமல் சலுகையை நிறுத்துவதற்கு ஆக்ஸிஸ் வங்கிக்கு உரிமையுள்ளது.
- இந்தச் சலுகையின் கீழ் கிஃப்ட் வவுச்சரை ரெடீம் செய்து வாங்கப்படுகின்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பாக ஏதேனும் முரண்பாடு அல்லது கிளைம் ஏற்பட்டால், ஆக்ஸிஸ் வங்கியின் எந்தத் தொடர்பும் இல்லாமல், மூன்றாம் தரப்பு விற்பனையாளருக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையே நேரடியாகத் தீர்க்கப்படும் மற்றும் ஆக்ஸிஸ் வங்கிக்கு எதிராக எந்தவொரு கிளைமையும் உருவாக்காது.
- சலுகையின் விதிமுறைகளும், நிபந்தனைகளும் ஆக்ஸிஸ் வங்கி வழங்கும் கிரெடிட் கார்டின் பயன்பாட்டை நிர்வகிக்கின்ற விதிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் மாற்றாக/அவற்றின் தன்மையைக் குறைப்பவையாக இல்லாமல், அவற்றுடன் சேர்ந்து கூடுதலானவையாக இருக்கும்.
- கிஃப்ட் வவுச்சரைப் பயன்படுத்துவதற்கான கூடுதல் விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் அமேசான் விதிக்கலாம், https://www.amazon.in/gp/help/customer/display.html%3FnodeId=201522810&app-nav-type=modal/ref=gcui_d_e_tc_o_d_ இல் காணக் கிடைக்கின்ற அந்த விதிமுறைகளும், நிபந்தனைகளும் ஆக்ஸிஸ் வங்கியால் வழங்கப்படுகின்ற இந்தச் சலுகையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்ந்து கூடுதலானவையாக இருக்கும். "அமேசான்" பரிந்துரைக்கின்ற வேறு எந்த விதிமுறைகளும், நிபந்தனைகளும் தனித்தனியாகப் பொருந்தும்.